

# இயலும்

## ஸ்ரீ லங்கா

2022 மார்ச் 15 முதல் நவம்பர் 14 வரையான 7 மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியானது, இன்றுபோல் 40 போட்டியாளர்கள் களம்காணும் களமாக இருக்கவில்லை.

வீரர்கள் என இன்று கூறிக்கொள்வோர் அன்று பயந்தோடினர். நாட்டில் அராஜக நிலை ஏற்பட்டு, வன்முறைகள் தலைவிரித்தாடின. வீழ்ந்த நாட்டை மீட்டெடுக்க தலைவர்களைத் தேட நேரிட்டது.

"அரகலய" போராட்டத்திற்கு தலைமைத்துவம் இருக்கவில்லை. அதுவொரு தீர்க்கமான காலகட்டம். அன்று முதல் இன்றுவரை சவால்களை ஏற்று, நாட்டை இயல்பு நிலைக்கு ஒரு தலைவர் கொண்டுவந்தார். இதை மறக்க முடியுமா?

மக்கள் வரிசைகளில் நின்று அல்லல்பட்டபோது ரணில் விக்ரமசிங்ஹ என்ற சிரேஷ்ட தலைவர் வரிசை யுகத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தார். சட்டம், ஒழுங்கு சீர்குலைந்து காட்டாட்சி நிலவியபோது, சட்டம் ஒழுங்கை நிலைநாட்டினார். முழு உலகுக்கும் அவர் முன்னுதாரணமாக செயற்பட்டார்.

இன்று ஜனாதிபதி தேர்தலில் களமிறங்கியுள்ளவர்கள், அன்று நாட்டைப் பொறுப்பேற்க அழைத்தபோது பயந்து பின்வாங்கினர். நாடு பற்றியெரியும் போது கண்டும் காணாததுபோல் இருந்தனர். தமது அரசியல் எதிர்காலம் குறித்து மட்டுமே சிந்தித்தனர். இப்படியான கோழைத்தனமானவர்களின் செயலை மக்கள் மனங்களில் இருந்து ஒருபோதும் அகற்றமுடியாது.

புத்திசாதுரியமான மக்களே!

தீர்க்கமானதொரு காலகட்டத்தில் நிற்கின்றோம். மரணப் பொறிக்குள் இருந்து நாட்டை மீட்டு, ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தியுள்ள தலைமையின் வேலைத்திட்டம் தொடர்வதற்கு ஓரணியில் திரள்வோம்.

ஆம்! முழு உலகினதும் ஆதரவையும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்ஹ இலங்கைக்குப் பெற்றுக்கொடுத்துள்ளார். இந்த ஒத்துழைப்பு எமது நாட்டுக்குத் தொடர்ந்து கிடைப்பதற்கு உங்கள் ஆணை அவருக்குத் தேவை.

அனுபவமும் தீர்வுகளும் இல்லாதவர்களிடம் ஆட்சி அதிகாரத்தைக் கையளித்து நாட்டை மீண்டும் இருண்ட யுகத்துக்குள் தள்ளுவதற்கு எம்மால் அனுமதிக்க முடியுமா? இது பரீட்சித்துப் பார்க்கும் தருணம் அல்ல. எனவே, நாட்டின் எதிர்காலத்தை ஆபத்துக்குள் தள்ளிவிடாது, நன்கு சிந்தித்து முடிவெடுப்போம். அந்த முடிவு ஒட்டுமொத்த நாட்டுக்கும் நன்மை பயக்கக்கூடியதாக அமையட்டும்.

எனவே, ஆபத்திலிருந்து எம்மை காத்தவருக்கு ஆதரவளிப்போம். வளமான நாட்டுக்கு வழிசமைப்போம்.



இலங்கை தற்போது வளம்பெற ஆரம்பித்துள்ளது.
பொருளாதாரம் புத்துயிர் பெற்று வருகிறது.

மக்களின் துன்பங்கள் துடைக்கப்பட்டு வருகின்றன.

இரண்டு வருடங்களில் எரிபொருள்
விலை குறைந்துள்ளது.

மின்சாரம் தடையின்றி கிடைக்கிறது.

வரிசை யுகம் முடிவுக்கு வந்துள்ளது.

சுற்றுலாத்துறை புத்துயிர் பெற்று வருகிறது.

பொருட்களின் விலைகள்
ஒப்பீட்டளவில் குறைந்துள்ளன.
கல்வி, சுகாதாரத் துறைகள்
மேம்பட்டு வருகின்றன.











நெருக்கடியில் இருந்து மீண்டு, இவை அனைத்தும் குறுகிய காலத்தில் அடைந்த வளர்ச்சியாகும்.

செய்துமுடிக்க இன்னும் பல பணிகள் இருக்கின்றன. இவற்றை வெற்றிகரமாக முடிக்க நாடு நிலையாக இருக்க வேண்டும். உங்களுக்கான இந்த வெற்றியைப் பெற்றுக்கொடுக்க ரணில் விக்ரமசிங்ஹவுக்கு மட்டுமே முடியும். நாம் அவருடன் ஒன்றிணைந்து வெற்றிகொள்வோம்.

எதிர்காலம் குறித்த தொலைநோக்குப் பார்வையும், அனுபவமும் தேர்ச்சியும் கொண்ட ரணில் விக்ரமசிங்ஹவைத் தவிர யாரிடம் நாட்டை ஒப்படைக்க முடியும்?

வாருங்கள்!
உங்கள் தெளிவான தீர்மானம் நாட்டையும், உங்கள் எதிர்காலத்தையும் வளப்படுத்தட்டும்!

# அடுத்த ஐந்தாண்டுத் திட்டம்

- அனைத்துக் குடும்பங்களதும் வாழ்க்கைச் செலவைக் குறைத்தல்
- நாட்டின் பொருளாதாரத்தை நிலைப்படுத்தி, அதிகரித்த வரிகளைக் குறைத்தல்
- தொழில்களை உருவாக்கி, சம்பளத்தையும் அதிகரித்தல்
- எமது பிராந்தியத்தில் இலங்கையை தொழில்நுட்பக் கேந்திரமாக ஸ்தாபித்தல்
- குடும்பம் ஒன்றுக்கு அவர்களின் எதிர்காலத்தை உறுதிப்படுத்த காணி அல்லது வீடொன்று பெறுவதை உறுதிப்படுத்தல்

ரணில் விக்ரமசிங்ஹவுக்கு நீங்கள் வழங்கும் வாக்கு
நிலையான, தன்னிறைவான இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கான வாக்காகும்.

ranil2024.lk

රනිල් වික්‍රමසිංහ
ரணில் விக்ரமசிங்ஹ
**Ranil Wickremesinghe**